# ஆய்வுச் சிந்தனைகள்

வரிசை 13 தொகுதி 1

பதிப்பாசிரியர்கள்

வீரா.அழகிரிசாமி

சு.கண்ணன்

ஐந்தமிழ் ஆய்வாளர் மன்றம்

2014

## நூல் செய்தி

| | |
|---|---|
| நூல் தலைப்பு | ஆய்வுச்சிந்தனைகள் (Aaivu Chinthanaigal)<br>வரிசை 13 தொகுதி - 1 |
| பொருள் | செவ்வியல், சமயம்,<br>மொழியியல், பிற |
| பதிப்பாசிரியர்கள் | வீரா.அழகிரிசாமி, சு.கண்ணன் |
| பதிப்பாலோசனைக்குழு | க.நாகநந்தினி, ஆ.பாப்பா |
| மொழி | தமிழ் |
| அளவு | 1 X 8 டெம்மி |
| எழுத்து | 11 புள்ளி |
| தாள் | மேப்லித்தோ |
| பதிப்பு | முதல் பதிப்பு 24-05-2014 |
| படிகள் | 150 |
| உரிமை | கட்டுரையாளர்கள் |
| **ISBN** | **978-81-923792-8-9** |
| விலை | விற்பனைக்கல்ல (பேராளர்கட்கு மட்டும்) |
| நிகழிடம் | கொங்குநாடு கலைஅறிவியல் கல்லூரி,<br>கோவை. |
| வெளியீடு | ஐந்தமிழ் ஆய்வாளர் மன்றம், மதுரை.<br>மற்றும்<br>செப்சிரா, 24, பழைய அக்ரஹாரம்,<br>சின்னச்சொக்கிகுளம், மதுரை 625 002. |
| அச்சீடு | ஜோசப் பிரிண்டர்ஸ்<br>61 மெயின்ரோடு, பரவை, மதுரை.<br>செல் : 99946-61194 |
| அட்டை | வீரா.அழகிரிசாமி |

இந்நூலில் இடம்பெறும் கட்டுரைக்கருத்து அந்தந்தக் கட்டுரையாளர்களுடையது.

39. ஔவையின் உயிர்ப்புச் சூழலியல் சிந்தனை
- சு. பூங்கொடி 190

40. பண்பாட்டியல் நோக்கில் உலகப் பொதுமறையும் குறிஞ்சிப்பாட்டும் - மு.நாகராஜன் 196

41. "கீழ்க்கணக்கு அகநூற்பனுவல்களில் மருதத் திணைச் சார்ந்தப்பதிவுகள்" - மு.ஐயப்பன் 201

42. ஔவையார் புறப்பாடல்களில் பெண்நிலைப் பதிவுகள் - சிந்து.மூ 205

43. புறநானூற்றில் வானவியல் - மா.சிலம்பரசன் 210

44. சங்கப் பெண் புலவர்களும் சூழலியல் பெண்ணியமும்
- அனுராதா 215

45. திருவிருத்தத்தில் சங்க இலக்கியத்தாக்கம்
- ரா.மகேஸ்வரி 220

46. பதினெண் கீழ்க்கணக்கில் மானிடவியல் பதிவுகள்
- த.கருப்பையா 225

47. சைவத் திருமுறைகளில் அருள் - ப.சி.குருசண்முகாம்பாள் 231

48. அற்புதத்தின் அற்புதம் காரைக்காலம்மையார்
- பெ.கிருஷ்ணவேணி 236

49. வைணவமும் சீக்கியமும் - ஒற்றுமைகளும் வேறுபாடுகளும் - சோ.கி.கல்யாணி 239

50. மூவர் தேவாரத்தில் மூவகைக் கற்பனைகள்
- சு.சதீஷ்குமார் 244

51. நம்மாழ்வாரும் இராமலிங்க அடிகளாரும் - ஜெ.செல்வம் 249

52. சண்டேசுவரர் - ஓர் பார்வை - கிளி மொழி 254

53. சிலம்பில் சமண ஏற்பும் - பௌத்த மறுப்பும்
- க.முருகேசன் 258

54. எழுத்ததிகாரத்தில் இளம்பூரணர் உரைத்திறன்
- க.பழனிவேல் 263

55. பரணர் பாடல்களில் இயற்கை - த.பூங்கோதை 268

56. சிலம்பில் எண் 'மூன்று' பெறும் சிறப்பு - வி.சுகந்தா 273

57. கருவூர்ப்புராணத்தில் கருவூர்த்தேவர் - ச.பத்மினி 278

58. திணைமொழி ஐம்பதில் ஐந்நிலப்பின்னணி
- இரா.மணிமேகலை 283

59. உமர்கய்யாம் பாடல்களில் உடல் தத்துவம்
- மா.கருணாகரன் 288

56

# சிலம்பில் எண் 'மூன்று' பெறும் சிறப்பு

தமிழ் காப்பியங்களுள் தலைமைக் காப்பியமாக, குடிமக்கள் காப்பியமாக, முத்தமிழ்க் காப்பியமாக இலங்கும் பெருமை படைத்தது சிலப்பதிகாரம். இக்காப்பியத்தில் 'மூன்று' என்னும் எண்ணுக்குப் பல வியத்தகு சிறப்புகள் அமைந்துள்ளன.

சிலம்பு மங்கல வாழ்த்துப் பாடலுடன் தொடங்குகின்றது. இயற்கைப் பொருட்களாகிய திங்கள், ஞாயிறு, மாமழை ஆகிய மூன்றையும் முதற்கண் வாழ்த்திப் பாடுகின்றார் இளங்கோவடிகள். இதில் திங்கள் என்பது அன்பு, உண்மை, இனிமை எனும் முப்பண்புகளை சுட்டுகின்றது. ஞாயிறு எனும் சொல், அறிவு, ஆண்மை, வன்மை ஆகிய மூன்று பெரும் பண்புகளைக் குறிக்கின்றது. மழை எனும் சொல் வளமை, தாய்மை, நீர்மை எனும் பண்புகளை அடக்கியுள்ளது. நிலவு, ஞாயிறு, மாமழை ஆகிய இச்சொற்கள் ஒவ்வொன்றும் மூன்று எழுத்துச் சொற்களால் ஆனது. எனவே, மங்கல வாழ்த்துப் பாடலில் முதலாவதாக 'மூன்று' எனும் எண் அமைப்பு பல சிறப்புகளைப் பெற்றிருப்பது இனிது விளங்கும்.

அடுத்து சிலம்பில் 'மூன்று' நீதிகள் வற்புறுத்திப் பேசப்படுகின்றது. அவையாவன அரசியல் பிழைத்தோர்க்கு அறமே கூற்று, உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும். சிலம்பு அமைந்துள்ள வகைமை என்பதைப் பற்றி சிந்திக்கும்போது மூன்று பெரும் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. புகார், மதுரை, வஞ்சி என மூன்று காண்டங்கள், ஒவ்வொரு காண்டத்தின் பெயரிலும் மூன்று எழுத்துக்கள் வீதம் அமைந்திருப்பது நோக்கத்தக்கது.

தமிழை முன்னோர்கள் மூன்று பிரிவுகளாகப் பிரித்தனர். அவற்றை இயல், இசை, நாடகம் என்று குறித்து முத்தமிழ் என வழங்கினர். இம்முத்தமிழ் சிறப்பும் உயர்வும், பீடும்

*வி.சுகந்தா, தமிழ்த்துறை, கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோவை.*